சுருக்கம்

பொதுப்பணிகள்– தமிழ்நாடு அமைச்சுப்பணி– திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகு– திரு.நா.சதீஸ்குமார், த/பெ காலஞ்சென்ற திரு.ஆர்.நாகையா– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது– பணியை வரன்முறை செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
பணிகள் அலகு, பணி9(2) பிரிவு

அரசாணை (3டி) எண்: 47

நாள்: 19.04.2022
திருவள்ளுவராண்டு 2053
சுபகிருது வருடம், சித்திரை–6

படிக்கப்பட்டது:

1. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆகு4/34485/2015, நாள் 31.05.2019.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில், லால்குடி வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி, பணியிடையே 07.12.1999 அன்று காலஞ்சென்ற திரு.ஆர்.நாகையா என்பவரின் மனைவி, திருமதி.சந்திரா என்பவர் தனது மகள், செல்வி.நா.அனிதா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி மூன்று ஆண்டு காலக்கெடுவிற்குள் 17.07.2000 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார் என்றும், அவ்விண்ணப்பம் பரிசீலனையில் இருந்த நிலையில், செல்வி.நா.அனிதா என்பவர் 05.02.2004 அன்று காலமானார் என்றும், அதனைத் தொடர்ந்து காலஞ்சென்ற அரசு ஊழியரின் மனைவி, திருமதி.சந்திரா என்பவர் தனது மற்றொரு வாரிசுதாரரான தனது மகன், திரு.நா.சதீஸ்குமார் என்பவருக்கு பணிநியமனம் வழங்கக் கோரி 17.08.2006 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார் என்றும், திரு.நா.சதீஸ்குமார் என்பவர் 18 வயதினை நிறைவு செய்யாததால், தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனத்திற்குரிய பிற தகுதிகளை நிறைவு செய்யும்பட்சத்தில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற ஏதுவாக தனியர் பொருட்டு அரசுக் கடித (நிலை) எண்.86/க்யூ1/2010–2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 04.05.2010 மற்றும் அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12.03.2007 ஆகியவற்றை தளர்வு செய்து அரசாணை (2டி) எண்.625, வருவாய் (பணி9(3)) துறை, நாள் 05.08.2014–ல் ஆணையிட்டுள்ளதன் அடிப்படையில் திரு.நா.சதீஸ்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது என திருச்சி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாகவும், காலஞ்சென்ற அரசு ஊழியர், திரு.ஆர்.நாகையா என்பவர் இறந்த 07.12.1999 தேதியில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.நா.சதீஸ்குமார் என்பவர் அரசு ஊழியர் இறந்து மூன்று ஆண்டுகளுக்குள் முதன் முதலாக அளிக்கப்பட்ட விண்ணப்ப நாளான 17.07.2000 தேதியில் 10 வயதினைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், தனியர் பணி நியமனம் செய்யப்பட்ட 20.04.2015 தேதியில் தனியர் 25 வயதினைப் பூர்த்திசெய்துள்ளார் என்றும், திரு.நா.சதீஸ்குமார் என்பவருக்கு உரிய கல்வி, வயது மற்றும் வறியநிலைத் தகுதிகளின் அடிப்படையிலேயே பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது எனவும், அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016–ன்படி, தனியர், திரு.நா.சதீஸ்குமார் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் தனியர் பணியேற்ற நாளான 20.04.2015

முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரிடமிருந்து வரப்பெற்ற முன்மொழிவினை ஏற்று, திரு.நா.சதீஸ்குமார் என்பவரின் இளநிலை உதவியாளர் பணியினை தனியர் பணியேற்ற நாளான 20.04.2015 முற்பகல் முதல் வரன்முறை செய்ததின்பேரில் அரசின் இசைவினைப் பெற்று தருமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில், இலால்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே 07.12.1999 அன்று காலஞ்சென்ற திரு.ஆர்.நாகையா என்பவரின் மகன் திரு.நா.சதீஸ்குமார் என்பவருக்கு மூன்றாண்டுகள் கடந்து அளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளதாலும், விண்ணப்பம் அளித்த நாளில் (17.08.2006) 18 வயது பூர்த்தி அடையவில்லை என்பதாலும், தனியரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியேற்ற நாளான 20.04.2015 முற்பகல் முதல் வரன்முறை செய்த திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறை ஆணையினை அரசளவில் இரத்து செய்து, தனியர் பொருட்டு, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020–யும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58–இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி [அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 12(bbb)] தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(b) மற்றும் பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து வழங்க ஏதுவாக [அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 23(a)(ii)] தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2)–ஐயும் தளர்வு செய்தும், திரு.நா.சதீஸ்குமார் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியேற்ற நாளான 20.04.2015 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறையின் அ.சா.எண்.6562/க்யூ–2/2021, நாள் 21.04.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.16037/ஜி2/2020–1, நாள் 24.07.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி.
திரு.நா.சதீஸ்குமார், இளநிலை உதவியாளர்,
(மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி மூலமாக)

**நகல்**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறை, சென்னை–9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.